

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 312 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 08 – சனிக்கிழமை 22 ஜுன் 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 312 : Thiruvalluvar Year - 2055 - Aani 08 - Saturday 22 June 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## கள்ளக்குறிச்சி சம்பவம் - உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு ஆறுதல்! தலா ரூ.10 லட்சம் நிதி!

# விஷச் சாராயம்: அறிக்கை அளிக்க விசாரணை ஆணையம்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (20.6.2024) தலைமைச் செயலகத்தில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மெத்தனால் கலந்த சாராயம் அருந்தியவர்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வளர்ச்சி ஆணையர் – முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி.செந்தில்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜீன் 22-**

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மெத்தனால் கலந்த சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்தும் சம்பவத்திற்குக் காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை - மற்றும் இதுகுறித்து அறிக்கை அளிக்க விசாரணை ஆணையம் அமைத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், கருணாபுரம் காலனியில் மெத்தனால் கலந்த சாராயம் அருந்தியதால் 34 நபர்கள் உயிரிழந்துள்ளனர் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வேதனையும் அதிர்ச்சியும் அடைந்தேன்.

**சம்பவம் நடந்த இடத்திற்கு அமைச்சர்கள் விரைவு!**

இச்சம்பவத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளித்திட அறிவுறுத்தியுள்ளதோடு, பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து, ஆறுதல் தெரிவிக்க நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று அனுப்பிவைக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து, மீண்டும் இன்று அவர்களுடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் கள்ளக்குறிச்சிக்குச் சென்றுள்ளார்.

இதுவரை இச்சம்பவத்தில் விஷச்சாராய விற்பனையில் தொடர்புடைய நான்கு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், இதில் தீவிர விசாரணை மேற்கொண்டு, குறிப்பாக விஷச் சாராயம் தயாரிக்க மெத்தனாலை வழங்கியவர்களையும் கண்டறிந்து, அவர்கள் மீதும் மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இச்சம்பவம் தொடர்பாக, சம்பந்தப்பட்ட காவல்துறை அலுவலர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பணியிட மாறுதல் செய்யப்பட்டுள்ளார்.

> **“கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள இந்தச் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொண்டு, இது நிகழ்ந்ததற்கான அனைத்துக் காரணிகளைக் கண்டறியவும், எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் தமிழ்நாட்டில் மீண்டும் நடைபெறாமல் இருக்க, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனைகளை வழங்கிடவும், ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதியரசர் பி.கோகுல்தாஸ் தலைமையில் ஒருநபர் ஆணையம் அமைத்திட உத்தரவிட்டுள்ளேன். இந்த ஆணையம், சம்பவம் குறித்து முழுமையாக விசாரித்து தனது பரிந்துரைகளை மூன்று மாதங்களுக்குள் வழங்கும்.”**

**தீவிர விசாரணைக்கும் மேல் நடவடிக்கைக்கும் உத்தரவு!**

மேலும் இதுகுறித்துத் தீர விசாரிக்கவும், உரிய மேல்நடவடிக்கை

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

### ‘நீட்’ தேர்வு மோசடி: விளக்கம் அளிக்க

## தேசிய தேர்வு முகமைக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் !

டெல்லி, ஜூன் 22-

நீட் தேர்வுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையில் ஒன்றிய அரசும், தேசிய தேர்வு முகமையும் உரிய விளக்கம் அளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீட் தேர்வுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் விளக்கம் அளிக்கும்படி ஒன்றிய அரசுக்கும், தேசிய தேர்வு முகமைக்கும் நோட்டீஸ் அனுப்பி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீட் தேர்வுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் அடுத்தடுத்து வழக்குகள் தொடரப்பட்டு வருகின்றன. அந்தவகையில், தற்போது மேலும் 3 வழக்குகள் தொடரப்பட்டு, நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தன. அப்போது, மனுதாரர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், நீட் தேர்வு மோசடி குறித்து விசாரணை நடத்த தேசிய தேர்வு முகமை, குழு ஒன்றை அமைத்துள்ளதாகவும், ஆனால் இது ஒரு கண் துடைப்பு என்றும் குற்றம்சாட்டினார்.

ஓய்வுபெற்ற நீதிபதிகள் அடங்கிய சுதந்திரமான விசாரணைக் குழுவை அமைத்து, நீட் முறைகேடு தொடர்பாக விரிவாக விசாரிக்க உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

கருணை மதிப்பெண் வழங்கப்பட்ட ஆயிரத்து 563 மாணவர்கள் யார் என்பதை வெளிப்படையாக அறிவிக்க உத்தரவிட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

நீட் மெரிட் பட்டியல் ஒரே பட்டியலாக நாடு முழுவதும் வெளியிட

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயச் சம்பவம்: முதல்வரின் அறிவிப்பிற்கிணங்க

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 லட்சம் நிதி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் வழங்கினார்!

**சென்னை, ஜீன் 22-**

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20-06-2024) கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மெத்தனால் அருந்தி சிகிச்சை பெற்று வரும் நபர்களை நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறி அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.**

அப்போது பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அரசு செயலர் திருமதி. கே.அமுதா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு செயலாளர் பிரதீப் யாதவ், சிறப்பு திட்ட செயலாக்க அரசு செயலாளர் மரு.தரேஷ் அகமது, தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். பிரசாந்த், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம். க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் ஆகியோர் உடனிருந்தனர்.



**உடனடி நடவடிக்கை!**

கள்ளக்குறிச்சி மாவட்டம், கருணாபுரத்தில் 19.06.2024 அன்று மெத்தனால் அருந்திய நபர்கள் தொடர்ந்து கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் உடல்நலக் குறைவால் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலுக்கிணங்க, உயர்தர மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டது. மருத்துவர்களின் பரிந்துரையின் பெயரில் சில நபர்கள் மேல்சிகிச்சைக்காக சேலம், விழுப்புரம், பாண்டிச்சேரி மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, சிகிச்சை மேற்கொள்ளப்பட்டன. இதில், எதிர்பாராத விதமாக சிகிச்சை பலனின்றி இறந்த நபர்களுக்கு உடற்கூராய்வு உடனடியாக மேற்கொள்ளப்பட்டு உறவினர்களிடம் உடல்கள் ஒப்படைக்கப்பட்டது.

**உயிரிழந்தவர்களின் இல்லங்களுக்கு நேரில் சென்றார்!**

மேலும், இம்மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் பொதுப்பணித் துறை அமைச்சர் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆகியோர் சம்பவம் நடைபெற்ற உடனே மருத்துவமனைக்கு வருகை புரிந்து, சிகிச்சை பெற்று வரும் நபர்களுக்கு மருத்துவ உதவிகள், கூடுதல் மருத்துவர்கள், போதிய மருந்துகள் இருப்பதை உறுதி செய்துள்ளனர். தொடர்ந்து, சிகிச்சையில் இருப்பவர்கள் மருத்துவ குழுக்களால் கண்காணிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. தொடர்ந்து, கருணாபுரத்தில், சிகிச்சை பலனின்றி உயிர் இழந்த நபர்களின் இல்லத்திற்குச் சென்று அவர்களது உடலிற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். மேலும், உயிரிழந்த நபர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தலா ரூ.10 இலட்சம் நிவாரண உதவித்தொகையினை உயிரிழந்தவர்களின் 27 குடும்பத்தினரிடம் நேரில் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், மருத்துவக் கல்வி இயக்குநர் மரு.சங்குமணி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.நா.சத்திய நாராயணன், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் திருமதி.புவனேஷ்வரி பெருமாள், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் (பொ) மரு.நேரு, இணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) (பொ) மரு.செந்தில்குமார், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு. ராஜா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.